# இலங்கையில் தமிழ்ப் பாடங்கள்

29
3.558

இ. சிவஞானசுந்தரம்

விலை ரூபா 1-00

1. 9. 69.

# இலங்கையில் தமிழ்ப் படங்கள்

★

எழுதியவர்:

சி. சிவஞானசுந்தரம்



வெளியீடு:

அழகு வெளியீட்டகம்,

ஏழாலை.

★

கிடைக்குமிடம்:

அன்பு புத்தகசாலை,

யாழ்ப்பாணம்.

## காணிக்கை:

திரைப்படத் தயாரிப்புகள்பற்றி அறியும் ஆவலால் ஆங்கில அமெரிக்க நூல்களைப் புரட்டிக் கொண்டிருந்த எனக்கு இலங்கைத் திரையுலகை ஓரளவு அறிமுகப்படுத்திய காலஞ் சென்ற இயக்குனர் திரு. பி. எம். வேதநாயகம் பி. ஏ. அவர்களுக்கு!



காலஞ் சென்ற, ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்,

## திரு. பி. எம். வேதநாயகம் பி. ஏ.

### அவர்கள்

(இலங்கையில் தயாரிக்கப்பட்ட கடமையின் எல்லை
படத்தின் இயக்குனர்)

திரு. க. துரைசிங்கம் அவர்கள்



"இன்பக்கனவு" — "வீரமைந்தன்" — "மணல்வீடு"
"சோழனின் செல்வன்" — "தமிழன் கதை"
ஆகிய நாடகங்கள் மூலம் புகழ்பெற்றவர்.

# நோக்கம்.

தமிழுணர்ச்சி மிக்கவர்கள் தலைகுனிகிறார்கள். கலையுணர்வு கொண்டவர்கள் கவல்கிறார்கள். குடும்பத்தினருடன் செல்பவர்கள் கூச்சத்துடன் திரும்புகிறார்கள். இனமொழி வெறிபிடித்தவர்கள் கொக்கரிக்கிறார்கள்.

இவையெல்லாம் எதனால்.........?

இலங்கையில் காட்டப்படும் தமிழ்ப்படங்களால் தமிழ்ப் படங்கள் என்று சொன்னால் அவற்றில் சிறிதளவாவது தமிழ்க்கலை, கலாச்சாரப் பண்பாட்டின் அறிகுறிகள் காணப்பட வேண்டாவோ?........

மேற்கத்திய வாசனையும் ஆங்கில மோகமுமே நிரம்பி வழியும் கஞ்சல் திரைச் சுருள்களையே ''கலை'' என்ற பெயரால் நாம் வாங்கிக் குவித்துக்கொண்டிருக்கிறோம். கலை என்றபெயரால் இலங்கையில் இறக்குமதியாகும் ஒவ்வொரு தமிழ்ப் படத்திற்காகவும் குறைந்த தொகையாக 50 ஆயிரத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாவரை அள்ளிக்கொடுக்கின்றோமே....

இதனால் நாம் அடையும் பயன் என்ன? ...... 'இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் கலாசாரப் படுகொலை தமிழ்ச் சினிமா' என்ற வசைச்சொல். 'தமிழ்ப் படங்கள் வெறும் குப்பைகள்' என்ற ஆங்கிலப் பத்திரிகை விமரிசனங்கள். இப்படியான ஏழ்மைக் கருத்துக்கள் சாதாரண தமிழ்ப்படரசிகர்களை எட்டவிடாது அவர்கள் வாசிக்கும் தமிழ்ப் பத்திரிகைகள் பாதுகாத்துக் கொள்ளுகின்றன.

தென் இந்தியத் திரைப்படங்கள் சர்வதேசரீதியில் எந்த இடத்தை வகிக்கின்றன என்ற உண்மைநிலே ஒவ்வொரு தமிழனுக்கும் தெரிந்தாகவேண்டும். நமது பாரம்பரிய கலேத்திறமைகள் போற்றப்படவேண்டும். தமிழர்கள் எந்தநாட்டில் வாழ்ந்தாலும் அந்தந்த நாட்டுக்கு விசுவாசமாய் இருக்கவேண்டிய அதேவேளே யில், தங்கள்மொழி - இனப்பண்பாட்டைக் காக்க வேண்டியதும் பெரும் பொறுப்பு. அதே நிலேயில் தமிழர்கள் அதிகமாக வாழும் தமிழ்நாட்டிலிருந்து பிற நாட்டிற்கு வரும் படங்கள் எப்படி இருக்கவேண்டும். ஆனுல் எப்படி இருக்கின்றன?

தமிழர்களே! சிந்தியுங்கள்!

இன்றைய நிலேயில் இலங்கையில் தமிழ்ப் படங்கள் தயாரிக்கப்படவேண்டிய கட்டாய சூழ்நிலே உருவாகியிருக்கிறது. சிலர் அதில் உற்சாகத்துடன் ஈடுபட்டும் வருகிருர்கள்.

'முதற்கோணல் முற்றுங்கோணல்' என்பார்கள். ஐந்திலே வளேயாதது ஐம்பதிலே வளேயுமா? ஈழத் தமிழ்த்திரையுலகம் தென்னிந்தியப் பாணியிலே ''சாம்பார்ப்'' படங்களேயே தயாரிக்க முனேயாமல் — சரியான கலேப்பாதையிலே ஆரம்பத்திலேயே செலுத்தப் படவேண்டும் என்பதே என்பேரவா.

இதை நிறைவேற்ற வேண்டியே குறிப்பிட்ட ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்க்கு மட்டும் என்றில்லாமல் தயாரிப்பாளர் தொடக்கம் சாதாரண ஏழை இரசிகர் வரை வாங்கி வாசிக்கக் கூடிய முறையில் இதை வெளியிடுகின்றேன்.

— ஆசிரியர்.

# இந்தியத் தமிழ்ப் படங்களும் இலங்கைத் தமிழரும்

தமிழ் நாடு தனித்துவம் வாய்ந்த பழம் பெருமை மிக்கது; தரணிக்கெல்லாம் கலைதந்த கவின்மிகு நாடு; காலங் காலமாய்ப் பல் விதக் கலைகளும் பல்கிப் பெருகிச் செழித்து வளர்ந்த பாங்கான நாடு; என்றெல்லாம் போற்றப்படுகிறது. கேட்கிறோம். உலகமே ஒத்துக்கொள்ள முன் வருகின்றது.

ஆனால்..... —

இத்துணைப் பழம் பெருமை வாய்ந்த புண்ணிய பூமியில் இருந்து வருகின்ற திரைப்படங்களால் இன்று உலகத் தமிழ னின் மானம் பறிபோகின்றதே!

தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன் என்றவர்களையே தமிழ்ப்படங்கள் கோழைகளாய் ஆக்கி விட்டன. இருபத்தைந்து முப்பது இலட்சம் ரூபா என்று பெருந்தொகைப் பணம் செலவு செய்து எடுக்கப்படும் தமிழ்ப் படங்கள் இரண்டு மூன்று லட்சம் ரூபா மட்டும் செலவு செய்து எடுக்கப்படும் மலையாள, சிங்களப் படங்களின் முன்னே தலை தாழ்த்தி நிற்கின்றன. பதினைந்து வருடக் குறுகிய கால வளர்ச்சி யிலே பாரதஜனாதிபதிப் பரிசையும் அகில உலகப் பரிசையும் மலையாளப்படமும் சிங்களப்படமும் பெற்றிருக்கின்றன, இவற் றுக்கெல்லாம் மூத்த நீண்டகால வரலாறுடைய, அதிகமான தயாரிப்பு விநியோக வசதிமிக்க தமிழ்ப்படங்கள் எதுவும் இது வரை ஒரு சர்வதேசப் பரிசையும் பெறவில்லை. ஏன் ஒரு ஜனாதி பதி பரிசைக் கூட முழுமையாகப் பெறவில்லையே!

பரிசுகள் போகட்டும்!

ஒரு நல்ல தமிழ்ப்படம் என்று வெளிநாட்டான் ஒருவனுக்குக் காட்டக் கூடியபடம் எது இருக்கிறது தமிழில்?

''வீரபாண்டிய கட்டப்பொம்மன்'' ஆசிய ஆபிரிக்கத் திரைப் பட விழாவிலே பரிசு பெற்றதும் ''பாதை தெரியுது பார்'' ரூசியாவிலே அமோக வெற்றி பெற்றதும் மட்டும் தமிழ்த் திரைப்பட வளர்ச்சிக்குப் போதுமானதா?

இவற்றைவிட, 'உன்னைப்போல ஒருவன்' 'யாருக்காக அழுதான்' என்று இன்னும் ஒரு சில படங்களை தமிழ்த் திரைப்படங்களென எடுத்துக் காட்டலாம் பெருமைப் படலாம் ஆனால் இவை தமிழ்த்திரைப் படத்தின் எதிர்முனை வளர்ச்சியினால்—ஆபாசப் போலி வளர்ச்சியினால் — மறைக்கப் பட்டு விடுகின்றனவே!

தமிழ்த்திரையில் குதிரைகள் வேகமாக ஓடுகின்றன, மோட்டார்கள் ஒன்றை ஒன்று படுவேகத்தில் துரத்துகின்றன. பார்க்கும் இரசிகர்கள் கைதட்டி விசிலடித்து ஆர்ப்பரிக்கிறார்கள் ''நல்ல டைரக்சன் என்னடா?... '' என்று பக்கத்தில் இருப் பவனைத் தட்டிச் சான்றிதழும் கொடுத்து விடுகிறார்கள். அந்தக் குறிப்பிட்ட காட்சி எப்படி எடுக்கப்பட்டிருக்கும் என்ற தொழில் நுணுக்க ஆராய்வோ, அந்தக்காட்சி கதையமைப்பில் எவ்வளவு பொருத்தமாகக் கையாளப்பட்டுள்ளது என்பது பற் றிய முடிவோ அவரிடம் இருக்காது. அவற்றைப்பற்றி அவர் கவலைப்படவும் மாட்டார். படத்தில் காட்சிகள் வேகமாக ஓட வேண்டும். குதிரையையும் மோட்டாரையும் போல, அவ்வளவு தான் அவர் விரும்புவது.

கோமாளிக் கூத்துக்களும் கோலாகலமான காட்சியமைப் புக்களும் ஏமாளித் தமிழனுக்குப் போதுமானவை. தமிழ்நாட் டுப் பண்பாட்டுப் பாரம்பரியம் பற்றியோ, தமிழனின் தற் கால நடுத்தெரு வாழ்க்கை பற்றியோ அவன் கவலைப்படுவ தில்லை. அவனைக் கவலைப்படவிடமாட்டார்கள் படாதிபதிகள்.

நாள் முழுவதும் துன்பப்படும் ஏழை இரசிகனை ஒரு மூன் றரை மணி நேரம் கற்பனைப் போலியுலகிலே சஞ்சரிக்கவிடுவது தான் அவர்களின் மகோன்னத இலட்சியமாயிற்றே.

ஏழை இரசிகன் அந்த மூன்றரை மணிநேரமும் கற்பனை வாழ்வின் சௌந்தரியத்தில் லயித்து மயங்கிக் கிடப்பது உண்

மையானலும் படம் முடிந்து வெளியே வந்ததும் நிஜவாழ்க்கை யின் முட்கள் அவனை நெருக்கி அழுத்தும் போது அவன் துடிக்கும் துடிப்பு............ அப்பாடா?

மலையுச்சியிலிருந்து மடுவுக்குள் விழுந்தவனின் நிலை.

மலையுச்சியிலிருந்து மங்கலமான காட்சிகளைக் கண்டவன் மேலும் பாதாளத்தில் கிடக்க விரும்புவானா? அடுத்த நாளும் அம்மலையுச்சியை நாடுகிறான் அங்கிருந்து சுற்றுப்புற அழகுகளை அள்ளிப்பருக ஆசைப்படுகிறான். அதற்குச் சில்லறை சிறு தொகை தேவைப்படுகிறது. எதை இழந்தோ சில்லறையைப் பெறுகிறான். சினிமாவுக்குப் போகிறான். தொடர்ந்து மூன்றரை மணிநேரம் போலியுலக சம்சாரம்.

மீண்டும் நிஜவாழ்வின் சோகம் துன்பம் துயரம்......

இந்த நிலையில் சினிமா ஒரு போதைப் பொருளாகி விடுகிறது. அது இல்லையேல் வாழ்வேயில்லை என்பது போலப் பலரின் வாழ்வை ஆகர்சித்துள்ளது. தமிழ்நாட்டு இளைஞர்களின் வாழ்க்கையிற் பெரும்பகுதி சினிமா பார்ப்பதிலும் அதைப் பற்றிய (ஆக்க பூர்வமானவையல்லாத) விடயங்களைப் பேசுவதிலுமே போய்விடுகிறது.

இத்துணைச் சக்திவாய்ந்த திரைக்கலை இன்று மனித சமூகத்தின் நல்வாழ்வுக்குப் பெருமளவில் உதவிசெய்ய முடியும். ஆனல் அப்படி உதவாவிட்டாலும் அழிவுக்காவது துணைசெய்யாதிருந்தாற் போதாதா?

இன்றைய தமிழ்த் திரைப் படங்களால் ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்கள் படும் அவஸ்தைகள் கொஞ்சநஞ்சமல்ல.

அரசியற் காரணங்களுக்காகத் தமிழ்ப் படத்தடை கோருவோரும்,

தேசியத் திரைப்பட வளர்ச்சி குறித்துத் தடைகோருவோரும் தமிழ்ப்படங்களின் தரத்தைக் குறைத்து இழித்துப்பேசுவதின் மூலம் இந்த நாட்டின் தேசிய இனங்களிலொன்றான தமிழினத்தையே அவமதிக்கிறார்கள்.

அவர்கள் பார்வையிலிருக்கும் இன மொழித் துவேசத்தை நீக்கிவிட்டால் எஞ்சும் கருத்துக்கள் உண்மையில் ஒவ்வொரு தமிழனும் வரவேற்கத் தக்கவையே.

தமிழ்ப்படங்களின் தாக்கத்திஞல் இந்தநாட்டுப் படத் துறை பாதிக்கப்படுகிறது என்கிருர்கள்.

மறுக்கமுடியாது.

அவற்றிலே கலையம்சம் இல்லையென்கிருர்கள், அவை உண்மையான தமிழ்நாட்டைப் பிரதிபலிப்பதில்லை என்கிருர்கள். அவை வெறும் கலாசாரப் படுகொலைகள் என்கிருர்கள்....... மறுக்கமுடியுமா?

அதேவேளையில், அத்தமிழ்ப்படங்கள் உண்மையான தமிழ் நாட்டை, திராவிடப் பண்பாட்டைச் சித்தரிக்கும் கலையம்சம் மிக்கனவாயிருந்தால் நாம் வரவேற்கிறேம் என்கிருர்கள். [மகிழ்ச்சியடைகிறேம்] தமிழ்ப் படம் தமிழ்நாட்டுத் திரைப் படம் என்று சொல்லக்கூடிய ''யாருக்காக அழுதான்'' படத்தைப்பற்றி நல்ல கருத்தே வெளியிட்டுள்ளனர் சிங்களத்திரைப் படத் துறையினர். மகிழ்ச்சியடைகிறேம்.

ஆகவே, தமிழ்நாட்டுச் சூழ்நிலையைச் சித்தரிப்பனவாய்ப் போலி நாகரிகப் போர்வையற்றவையாய் கலைமெருகுடன் படைக்கப்படும் தூயதமிழ்த் திரைப்படங்களை இலங்கையர் யாவருமே வரவேற்பர். என்பதில் ஐயமில்லை.

இவற்றைவிட இந்தியப் பண்பாட்டுக்கு முரண்பட்ட ஒரு பொய்யான பகட்டு வாழ்க்கையை இனிமேலும் நாம் பார்த்து ஏமாறமாட்டோம்.

அதே நேரத்தில் தமிழ்நாட்டு உண்மை நிலையை நாமறிய வாய்ப்பளிக்கும் உன்னதக் கலைப்படைப்புக்களை மனமார வரவேற்கிறேம்.

# தமிழ்ப் படங்கள் ஏன் தயாரிக்கப்படுகின்றன?.........

சிங்களப் படங்கள் வளர்ந்து வருகின்றன. சிங்களத் திரையுலகம் தீவிர முன்னேற்றம் அடைந்து வருகிறது. இன்று பரவலாகப் பேசப்படும் கருத்துக்கள் இவை. உண்மை மறுக்கமுடியாது. சிங்களப்படங்கள் எல்லாமே தரமானவை என்று சொல்வதற்கில்லை; என்பது எத்துணைஉண்மையானதோ அத்துணைஉண்மை ஒரு சில படங்கள் மிகச்சிறப்பானவை என்பதும்.

சிங்களப் படங்கள் ஆரம்பந் தொட்டு மிகச் சமீபகாலம் வரை வளர்ந்து வந்த இடம் தமிழ் நாடு. ஆனால் இன்று தமிழ் நாட்டை சிங்களத்திரை உதாசீனம் செய்கிறது. இழித்துப் பேசுகிறது. வழி நடத்த முனைகிறது.

ஆம். அதற்கு தடைசொல்லமுடியாது.சிங்களக்கலை கலாச்சாரப் பண்பாட்டின் அடிப்படையில் தற்கால வாழ்க்கை முறைகளைச் சித்தரிக்கும் படங்களைக் கலை மெருகு குன்றாமல் திரைக்களிப்பவர்கள் இவர்கள். தமிழ்ப்படாதிபதிகள் போலக் கலையைக்கொலை செய்து மாமிச வியாபாரம் நடத்துபவர்களல்லவே இவர்கள். நமது மொழி, நமது இனம், நமது நாடு, நமது கலாச்சாரம், நமது வாழ்வு என்ற அடிப்படையில் கலை வளர்ப்பவர்கள் இவர்கள். நமது பணம் நமது படம் நமக்கு லாபம்; என்று கருதும் கலை வியாபாரிகள் தென்னிந்தியப் படாதிபதிகள். இன்றைய மனித வாழ்க்கையின் அன்றாட முக்கிய பிரச்சனைகளை ஆர்வத்துடன் அணுகி ஆராயும் கலைஞர்களல்ல அவர்கள். இன்றைய

மனித வாழ்க்கையையே போலியாக்கிக் காட்டிப் பணம் பறிப்பவர்கள் அவர்கள்.

இப்படியாகப் போலிக்கும் அசலுக்கும் போட்டி ஏற்படும் நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. இதே நேரத் இலங்கையின் தேசீய நலன்கருதித் தமிழ்ப்படங்களுக்கு தடைகள் பல விதிக்கப்பட வேண்டும் என்கிறார்கள், நாம் வரவேற்க முடியுமா? முற்றாகத் தமிழ்ப்படங்களைத் தடை செய்வதை எபபொழுதுமே தமிழர்கள் ஆதரிக்க முடியாது. ஆனால், கட்டுப்பாடுகளை ஆதரிக்க வேண்டியேயுள்ளது. இன்றைய நிலையிலே தென்னிந்தியத் தமிழ்ப்படங்களால் நாம் அடையும் நயமென்ன என்பதைச் சற்று நிதானமாக, உணர்ச்சிவயப் படாமல் நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

முதலாவதாக தென்னிந்தியப்படங்கள் ஏன் தயாரிக்கப்படுகின்றன என்று பார்ப்போம். திரைப்படம் ஒரு கலைப்பாலம் என்பதை மறந்து விட்டார்கள் அது ஒரு மோசடி வியாபாரப் பொருள் என்ற ரீதியிலேயே இன்று தயாரிக்கப்படுகின்றது. இதுவரை எந்தத் தமிழ்த்திரை இயக்குனரோ அன்றிப் படாதிபதியோ தாங்கள் கலைக்காகவோ, தமிழர்க்காகவோ படம் எடுப்பதாகக் கூறியிருக்கிறார்களா? இல்லவே இல்லை.

எல்லோருமே திரைப்படத்தை வியாபாரத்திற்காகத் தயாரிப்பதாகத்தான் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் நம்மவர்கள் சிலர் 'தமிழ்ப்படங்கள் இந்தியாவின் கலைத்தூதுவர்கள் அவற்றைக் கட்டுப் படுத்துவதால் தமிழே அழிந்துவிடும்' என்பது போலப் பிதற்றியுள்ளனர்.

இது அரசியல் விடயமல்ல, தடைவிதிப்பின் அடிப்படையில் இன அரசியற் காரணங்கள் இருந்தாலும் தமிழ்ப்படத் தடைவிதிப்பு ஈழம்வாழ் தமிழர்களின் நல்வாழ்விற்குகந்ததே. இத் தடை விதிப்பால் புளித்துப்போன தமிழ்ப்பட உணர்வு மங்கிப் புது உணர்வு பிறக்கட்டும். தமிழிளைஞர்கள் வெறும் கேளிக்கைகளிலும் கோமாளித்தனங்களிலும் தங்கள் சக்தியை விரயம் செய்யாது நாட்டுக்கும் மொழிக்கும் மனித இனத்திற்கும் நற்பணியாற்றச் செலவிடட்டும். குறுகிய வட்டங்களிலேயே விநியோக வசதிபெற்ற சிங்கள மலையாளப் படங்களைப்போலச் சிக்கனமாகத் தமது சொந்தப் பாரம்பரியங்களைப் பிரதிபலிக்கும் கலைப்படங்களை ஆக்கும் திறன் பெறட்டும்.

**போலி வாழ்வின் பெருமிதங்கள் ஒழியட்டும். கூலிவாழ்வின் குறை நிறைகள் விளங்கட்டும். ஈழத்திலும் ஒரு சத்தியஜித் ரே தோன்றட்டும். உலகத் திரைப்பட விழாவில் ஈழத் தமிழ்ப்படம் பரிசு பெறட்டும்.**

ஏறக்குறைய அரை நூற்றாண்டு அனுபவமும் தென்கிழக்காசியாவிலேயே அதிகவசதியுடைய ஸ்ருடியோவும், லாபரட்டரிகளும், ஏராளமான பண முதலீடும் தமிழ்நாடுதவிர இலங்கை, மலேஷியா. இந்தோனேஷியாவிலும் சந்தைகளும் உள்ள, ஒரு வலுவான தமிழ்த்திரையுலகம் செய்யமுடியாத எத்தனை சாதனைகளை இவ்வசதிகளில் எதுவுமே பூரணமாகப் பெற்றிருக்காத மலையாளப்பட உலகில் ஒரு இராமு காரியத்தும், சிங்களத் திரையுலகில் ஒரு லெஸ்டர் ஜேம்ஸ்பீரிசும் செய்திருக்கிறார்கள்! இதுபற்றித் தமிழ்ப் பட உலகம் வெட்கித் தலைகுனிய வேண்டும். அகிலம் முழுவதும் போற்றக் கூடிய நடிப்பாற்றல் மிகுந்த

**நடிகர் திலகத்தையும்**, இதுவரை எந்தக் கலைஞனுமே பெற்றிராத அளவு மக்களாதரவு பெற்ற **மக்கள் திலகத்தையும்** தமிழ்ப்பட உலகம் தன்போலிப்பிரமையில் மூடிவைத்திருக்கிறதே! இது பற்றித் தமிழ் நாட்டில் கலையுணர்வு மிக்கபல அறிஞர்கள் கவலைப்படுகிறார்கள். ஆனால் ஆவதென்ன? அலங்கோலப்படங்களே அதிகம் வெளிவருகின்றன மக்களின் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தங்கள் மூலதனமாகக் கொள்பவர்கள் இனிமேல் திருந்துவார்கள் என்று எப்படி எதிர்பார்க்கமுடியும்?

★

## கலைப்படைப்புக்களை வரவேற்போம்.

ஈழத்திலே தமிழ்ப்படங்கள் தயாரிக்கப்பட வேண்டும். ஆனால் அவை தென்னகத்துப்பாணியிலே மட்டும் தயாரிக்கப்படக் கூடாது. திரைப்படத்தை வெறும் வியாபாரமாகக் கருதும் பணக்காரர்கள் தயவு செய்து இதில் ஈடுபடக்கூடாது.

வியாபாரப் போட்டியிலே நாம் தென்இந்தியப் படங்களுடன் போட்டி போடுதல் உடனடியாக முடியாத தொன்று. ஆனால் வியாபாரத்திற்கல்லாத இலட்சியப்படங்களை நாம் எடுப்பதன் மூலம், மக்களின் எளிய வாழ்க்கையைச் சித்தரிப்பதன் மூலம், ஏழைகளின் பிரச்சனைகளைத் தீர்க்கும் வழிகளைக் காண முயல்வதன் மூலம் மட்டுமே நாம் இத்துறையில் வெற்றி காண முடியும்.

இவற்றை விட்டு 'பழைய குருடிகதவைத்திற' என்றது போலத் தென்னிந்திய போலிச் சம்பிரதாய சினிமாக்களையே ஈழமும் தயாரிப்பதாயிருந்தால் தமிழ்ப்

படங்களே இலங்கையில் வேண்டாம். நாட்டுக்கு நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாத படங்களை நாம் வரவேற்கிறோம். அவை உலகின் எந்தப்பாகத்தி லிருந்தும் வரலாம். அவை தமிழ்நாட்டிலிருந்து வந்தால் நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி நம்நாட்டிலேயே தரமான படங்கள் தயாரிக்கப்பட்டு அவை வெளிநாட்டாரின் கவனத்திற்பட்டு பழந்தமிழ்க்கலைக்குள்ள அதே மதிப்பை இன்றைய எதிர்காலத் தமிழ்க்கலையும் பெற் றால் நம் மகிழ்ச்சிக்கு எல்லையும் உண்டோ?

இது நடக்குமா?

இதுவரை ஈழத்திலே தயாரிக்கப்பட்டவற்றில் நான்கு படங்களே 35 மி. மீ படங்கள் அவற்றில் எதி லுமே புதுமை வாசனை கிடையாது என்பது உண்மை. ஆயினும் ஒன்றிற்கொன்று அவற்றைப் பொறுத்தவரை கணிசமான அளவு தொழில் ரீதியான முன்னேற்றத் தைப் பிரதிபலிக்கின்றன. ஆனால் அவற்றில் தென்னிந் தியத் தமிழ்ப்பட வாசனையே மேலோங்கி நிற்கிறது.

எதிர்காலத்தில் தமிழ்ப்படம் தயாரிப்பவர்களா வது இலங்கையின் சூழல் வாழ்க்கைமுறை என்பவற் றின் பொருத்தமான பின்னணியிற் படங்களை ஆக்க முயலட்டும். இல்லாத பொல்லாத ஆடம்பர வாழ்வு களைக் காட்டி இரசிகர்களை ஏமாற்றிப் பிழைக்கும் தந்திரத்தை விட்டொழிக்கட்டும் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு வால்ட்டிஸ்னியாகவோ, சிசில்பிடிமிலியா கவோ சத்தியஜித்ரேயாகவோ எவ்வழியிலாயினும் செயற்கரிய செய்தவர்களாக ஆகட்டும்

வளரட்டும் தமிழ்க்கலை

## ஈழத்திரை வளர......

குழந்தைப் பிள்ளைத்தனமான கோணங்கிச் சேட்டைகளையும், குடும்பப் பொறுப்பற்ற சமுதாய உணர்வற்ற ஊழல்களையுமே வளர்க்க முற்படும் இன்றைய தமிழ்ப்படங்கள் எந்தவிதத்தில் உயர்ந்து விளங்குகின்றன. திரைப்படம் என்றதும் தமிழ்ப்பட இரசிகனின் கண்முன்னே ஒரு 'கனவுலகம்' விரிவடைகிறது.

அங்கு வயிற்றுப்பசியால் துடிப்பதாகக் கூறுவான் கதாநாயகன் அவன் கதையைப் பொறுத்தவரை மிக ஏழைதான் ஆனால் காதலைப் பொறுத்தவரை ஊட்டியிலோ பிருந்தாவனத்திலோ கோவளம் கடற்கரையிலோ காதலியைக் கலைத்துப் பிடிக்காமல் விடமாட்டான். அவன் போவதும் வருவதும் 'செவர்லே' அல்லது 'அம்பா சிடரில்' தான்.

இப்படியான பகட்டுக்கள் நிறையவுண்டு. உடை நடைகாட்சியமைப்பு பேச்சு எதிலுமே போலி போலி போலி **ஆங்கிலப்படங்களிலே வருகின்ற குப்பைகளைப் பொறுக்குபவர்கள் அவற்றிற் கிடக்கும் குன்றிமணிகளை மட்டும் ஏனோ தவற விட்டு விடுகிறார்களே!**

அமெரிக்க ஆங்கிலப் படங்களில் நாம் எதிர்பார்க்கும் கலைநுணுக்கங்கள் தொழில் நுட்பத் திறமைகள் என்பவற்றைத் தமிழ்ப்படங்கள் பின்பற்றவேண்டும். ஆங்கிலப்படங்களைப் போல வகை வகையாகப்படங்களைத் தயாரிக்க முயலவேண்டும்.

முழுக்க முழுக்கக் கலைக்காக இல்லாவிட்டாலும் புதுமைக் கலப்புடன் சமுதாயத்தைப் பாழ்படுத்தாத படங்களை-நல்ல உணர்வுகளை ஊட்டக்கக் கூடிய படங்களைத் தயாரிக்கலாமே!

அப்பொழுது ஈழத்திரை வளரும்.

சிரிப்புக்கு ஒன்று சீர்திருத்தத்திற்கு ஒன்று வளர்ந்தவர்க்கு ஒன்று குழந்தைகளுக்கொன்று, கலைக்கு ஒன்று வியாபாரத்திற்கு ஒன்று என்ற ரீதியிலே அமரிக்கப்படங்கள் தனித்துவம் பெற்று வருதலைக் காண்கிற நாம், தமிழ்ப்படங்கள் மட்டும் இனிப்பும் கசப்பும் புளிப்பும் துவர்ப்பும் பொருத்தமற்ற முறையிற் கலந்த புளித்துப் போன சாம்பார்ப் படங்களாகவே இருக்கின்ற தன்மையைக் கண்டு நாணுகின்றோம்.

ஒரு திரைப்படத்திலேயே எல்லாவற்றையும் கண்டுவிட முயல்கிறான் இரசிகன்

காட்டிவிட முனைகிறார் தயாரிப்பாளர்

அவனைக் கடந்தகாலப் படங்களும் பத்திரிகைகளுமே இந்த நிலைக்கு ஆளாக்கியுள்ளன. திரைப்படம் என்றதும் அது ஒரு கற்பனை உலகம் அங்கே பணம் என்பது பாய்ந்தோடும் கருவி பகட்டான வாழ்வு பூலோக சொர்க்கம் என்றெல்லாம் கற்பனை பண்ணும் அளவிற்கே இரசிகனை ஆட்படுத்திவைத்துள்ளன.

இந்தநிலை மாறத் தயாரிப்பாளர்களும் தரமான படங்களைத் தயாரிக்க முன்வர வேண்டும். இரசிகர்கள் அவற்றிற்கு ஆதரவு தரவேண்டும் தரமான படங்களை நுணுக்கமாக விமரிசிப்பதன் மூலம், — அவற்றிலுள்ள நல்ல கருத்துக்களை கலையம்சங்களைப் பாராட்டி எழுதுவதன் மூலம் இரசிகனின் விஞ்ஞான ரீதியான திரைபபட அறிவை விருத்தி செய்ய முனைவதன் மூலம் பத்திரிகைகள் நிறையச் சேவை செய்யவேண்டும்.

அண்மையில் ஒளிப்பதிவாளர் ஏ. ரி. அரசு அவர்களுடன் திரைத் துறைபற்றிப் பேசிக் கொண்டிருக்கையில் அவர் கூறிய கருத்துக்கள் என்னை மிகவும் கவர்ந்தன. எனவே அவரிடம் சில கேள்விகளைக் கேட்டேன். அவர் கூறிய பதில்களை வாசகர்களும் அறிந்து கொள்வது நல்லதல்லவா?

கே. தாங்கள் திரைப் படத்துறையில் நுழைந்தமைக்குரிய காரணமென்ன? கலை ஆர்வமா? அல்லது தொழில் ரீதியான ஈடுபாடா?

ப. கலை ஆர்வம் என்று தான் சொல்ல வேண்டும். அதாவது அப்போது ஈழத்தில் யாரும் ஈடுபட்டு செயல்படாத புதிய நுட்பமான ஒரு தொழிலைப் படித்து அறிந்து அதன் வழியில் கலையை வளர்க்க ஆசைப்பட்டேன். அதுவே என் தொழிலாகவும் அமைந்து விட்டது

கே. இதுவரை எத்தனை சிங்களப் படங்களின் தயாரிப்புகளில் பங்கு கொண்டுள்ளீர்கள்?

ப. ''சுதுசந்தே கலுவல'' என்ற சிங்களப் படத்திலிருந்து ''சமாய சத்துரு'' என்ற படம் வரை சுமார் இருபது படங்களுக்கு மேல்.

கே. ஏன் இதுவரை நீங்கள் ஒரு தமிழ்ப் படத்தைத் தயாரிக்க முனைய வில்லை?

ப தமிழ்ப் படத்தில் போடும் பணத்தை திருப்பி எடுக்க முடியவில்லையே? ஏன்? இருந்தாலும் சீக்கிரம் தமிழ்ப் படம் ஒன்று எடுப்பேன்.

கே. தமிழ்ப் படம் தயாரிக்கும் பட்சத்தில் கலை பண்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பீர்களா? வெறும் வியாபாரத்தில் மட்டும் கண்ணுயிருப்பீர்களா?

ப கலைக்கும், பண்பாட்டுக்கும், முக்கியத்துவம் கொடுக்கும் அதே வேளையில் முதலீடு செய்யும் பணத்தையும் மீட்கவும் பாடுபடுவேன்.

கே. திரைப்படத் தொழில் நுணுக்க வல்லுனர் என்ற முறையில் இலங்கையில் தமிழ்ப் படங்கள் தயாரிப்பதில், நீங்கள் அடை

யக்கூடிய கஷ்ட நஷ்டங்களென்ன?

ப. தொழில் நுட்பக் கலையில் பயிற்சியும், அனுபவமுமில்லாத தயாரிப்பாளர்களும், இயக்குனர்களும், எமது தொழில் நுட்பக் கலைகளில் தலையிட்டு எம்மை எமது இஷ்டத்திற்கு செயற்பட விடாமல் தடுப்பது.

தயாரிப்பாளருக்கோ-இயக்குனருக்கோ ஏதோ ஒருவிதத்தில் வேண்டிய, ஆனால் பொருத்தமற்ற நடிகர்களை ஒளிப்பதிவுக்கருவி மூலம் ரசிகர்கள் விரும்பும் கோணங்களில் படம் பிடிக்கும் போது ஏற்படும் சிரமங்கள்,

தொழில் நுணுக்க வல்லுனரோடு ஒத்துழைக்காத இயக்குனருக்கும், தயாரிப்பாளருக்கும் இடையில் ஏற்படும் போட்டி, பொறுமை, தந்திரங்கள், முதலியனவற்றால் ஏற்படும் சிரமங்கள் போன்ற இன்னும் பலவும்.

கே. இக் கஷ்டங்கள் எல்லாவற்றையும் கடந்து இலங்கைத் தமிழ்த் திரை முன்னேற வழியுண்டு எனக்கருதுகிறீர்களா?

ப. மேலே கூறிய கஷ்ட நஷ்டங்களை உணர்ந்து அவற்றைப் போக்கித் தயாரிப்பாளர்களும் இயக்குனர்களும் கலைவல்லுனர்களோடு ஒன்று சேர்ந்து ஒத்துழைத்தால் நிச்சயம் ஈழத்தில் தமிழ்த்திரை முன்னேறும்.

கே. கடைசியாக இலங்கையில் தமிழ்ப்படங்களை எடுக்க முனைபவர்களுக்கு நீங்கள் கூறக் கூடிய தென்ன?

ப, பணம் முதலீடு செய்பவரே நடிப்பதும். கதை வசனம் பாடல்கள் எழுதுவதும், இயக்குவதும். இதுவரை ஒளிப்பதிவு கருவியை இயக்குவதை மட்டுமே விட்டு வைத்த அவர்கள் அதையும் இனிமேல் இயக்குவதும், போன்றவைகளை தவிர்த்து, தென்னிந்தியத் தமிழ்ப் படங்களை தடை செய்ய வேண்டுமென்ற கட்சியிலும் சேராமல் மற்றப் படங்களில் இல்லாத சிறந்த முக்கிய, விஷேச, இயற்கையான அம்சங்களை நிறையப் புகுத்தி உலகமெங்கும், எமது படங்களைப் பார்த்துப் பாராட்டி, வாங்கி திரையிடக் கூடிய அளவுக்குத் தகுதிபெறும் படங்களைத் தயாரிக்க முன்வர வேண்டுமெனக் கூறி விடைபெறுகிறேன்

வணக்கம்

# எமது அடுத்த வெளியீடுகள்

**நிமலனின்**

"என்று காண்போம்"
(நாவல்)

"உள்ளத்தின் ஆழத்தில்"
(நாவல்)

"தமிழ்க் கதம்பம்"
(தமிழுணர்ச்சிக் கவிதை
கட்டுரை கதை நிறைந்தது)

"பிணைப்பு"
(சிறுகதைகள்)

"உள்ளப்பூ"
(கவிதைகள்)

## சி. சிவஞானசுந்தரம் எழுதும்

1. தமிழும் ஆங்கிலமும்
2. தமிழரின் ஆங்கில மோகம்
3. தேன்மொழி தென்மொழி
4 ஆங்கில மூலம் தமிழ் Tamil Through English

அழகு வெளியீட்டகம்,
ஏழாலை.



போலி வாழ்வின் பெருமிதங்கள் ஒழியட்டும். கூலிவாழ்வின் குறை நிறைகள் விளங்கட்டும். ஈழத்தி லும் ஒரு சத்தியஜித் றே தோன் றட்டும். உலகத் திரைப்பட விழா வில் ஈழத் தமிழ்ப்படம் பரிசு பெறட்டும்.



அழகு வெளியீட்டகம்,
ஏழாலை.

மொழியரசி அச்சகம், அளவெட்டி.